வணக்கம்! இந்தச் செய்தி குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் பற்றியது. உங்களுக்கு காய்ச்சல் இருந்தால் என்ன செய்யலாம் என்பது பற்றியும் எப்போது ஒரு குழந்தை மருத்துவரைச் சந்திக்க வேண்டும் என்பது பற்றியும் உதவிக்குறிப்புகளை நான் தருகிறேன்.

ஒரு குழந்தையின் உடல் வெப்பநிலை 38.5 டிகிரி செல்சியஸுக்கு மேல் இருந்தால் அவருக்கு காய்ச்சல் இருக்கும். 3 மாதங்களுக்கு குறைந்த வயதுள்ள குழந்தைகளுக்கு, காய்ச்சல் தொடக்கப்பு 38 டிகிரி செல்சியஸ் ஆகும். காய்ச்சல் இருக்கும்போது, குழந்தைக்கு கன்னங்கள் சிவந்து, நெற்றி சூடாக இருக்கும். பெரும்பாலும் மூக்கு ஒழுகுதல் அல்லது மற்றொரு அறிகுறியும் உள்ளது. ஆனால் காய்ச்சல் பொதுவாக ஆபத்தானது அல்ல. உடல் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது.

**இந்த 5 குறிப்புகள் மூலம் காய்ச்சல் உள்ள உங்கள் குழந்தைக்கு நீங்கள் உதவலாம்:**

1. உங்கள் பிள்ளைக்கு நிறைய தண்ணீர் மற்றும் தேநீர் குடிக்கக் கொடுங்கள். புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு, தாய்ப்பால் அல்லது பால்மா கொடுங்கள்.
2. உங்கள் குழந்தையை அதிகம் தூங்க விடுங்கள்.
3. குழந்தைக்கு இலேசாக மட்டும் ஆடை அணிவியுங்கள். உடலை அதிகமாக மூடாதீர்கள்.
4. குழந்தைகளுக்கு காய்ச்சலுக்கு சிறப்பு மருந்துகள் உள்ளன. உங்கள் பிள்ளைக்கு எந்த மருந்துகள் நல்லது என்று மருந்தகத்தில் கேளுங்கள்.
5. உங்கள் குழந்தை மீது அதிக கவனம் செலுத்துங்கள். உதாரணமாக, உங்கள் குழந்தைக்கு நீங்கள் ஏதாவது படித்துக் காட்டலாம்.

**உங்கள் குழந்தையை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமா இல்லையா என்று உறுதியாக தெரியவில்லையா? இந்த 8 சூழ்நிலைகளில் ஒரு குழந்தையை ஒரு மருத்துவரிடம் காட்ட வேண்டும்:**

1. குழந்தைக்கு காய்ச்சல் உள்ளதுடன் அதன் வயது 3 மாதங்களுக்கும் குறைவானது.
2. 4 நாட்களுக்குப் பிறகும் காய்ச்சல் சரியாகவில்லை.
3. மருந்து மூலம் காய்ச்சலை குறைக்க முடியவில்லை
4. குழந்தை மிகவும் களைப்பாக இருக்கிறது. குழந்தை அரிதாகவே பதிலளிக்கிறது, மேலும் குழந்தையை எழுப்புவது கடினமாக உள்ளது.
5. குழந்தை தண்ணீர் குடிப்பதில்லை அத்துடன் தனது டயப்பர்களில் சிறுநீர் கழிப்பதில்லை.
6. குழந்தையால் தலையை முன்னோக்கி வளைக்க முடியாதுள்ளது அல்லது தொடும் போது வலி ஏற்படுகின்றது.
7. குழந்தைக்கு சிவப்பு புள்ளிகளுடன் ஒரு சொறி ஏற்படுகின்றது இத்தகைய நிலைமைகளை கவனத்தில் எடுக்காதிருக்க முடியாது, சிகிச்சை வழங்க வேண்டும்.
8. குழந்தைக்கு காய்ச்சல் வலிப்பு உள்ளது. தசைப் பிடிப்பு ஏற்படுகின்றது, குழந்தை மயக்கமடைந்துள்ளது அல்லது கண்கள் மேலே போயுள்ளன.

என்ன செய்வது என்று தெரியவில்லையா? பெற்றோர் ஆலோசனை மையத்திலோ அல்லது குழந்தை மருத்துவரின் அலுவலகத்திலோ கேளுங்கள். அனைத்து முகவரிகளும் தொலைபேசி எண்களும் www.meinkindistkrank.ch இல் உள்ளன

உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் வாழ்த்துக்கள்!